## முன்னணியில் தமிழ்நாடு!

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் புத்தாக்கத் தொழில்முயற்சிகள் உருவாகியுள்ளதாக இந்த ஆண்டு தொடக்கத்தில் புள்ளிவிவரங்கள் வெளியாகி இருந்தன. குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ‘ஸ்டார்ட்-அப்’கள் உருவாகி இருந்தன.

கடந்த மாதம் ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில், தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், இந்திய அளவிலான ஏற்றுமதியில் மூன்றாவது இடத்திலும் தமிழ்நாடு இடம்பிடித்திருந்தது. ஒன்றிய அரசின் தற்போதைய புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவிலேயே அதிக வேலை வாய்ப்பு வழங்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்தி, வேலைவாய்ப்பு, மூலதன உருவாக்கம் ஆகியவற்றில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

கடந்த ஆட்சிக் காலங்களில், தொழில்துறை, புத்தாக்க முயற்சிகளில் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களுக்கு அடுத்த நிலையில் இருந்த தமிழ்நாடு, கடந்த மூன்று ஆண்டுகளில், இந்தியாவுக்கே முன்மாதிரியாக உருவெடுத்துள்ளது. நாட்டின் மொத்த வேலைவாய்ப்புகளில் தமிழ்நாடு மட்டும் 15 சதவிகித பங்கினைக் கொண்டுள்ளது.

வழிநடத்தும் கொள்கையும், தொலைநோக்குத் திட்டங்களும், தெளிவான தலைமையும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வாய்ப்புகள் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துகளைப் பகிர்கின்றனர். திராவிட மாடல் என்றால் என்ன என்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே உலகுக்கு உணர்த்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### மணமக்களுக்காக காத்திருந்த தலைவர்!



க.சொ.க.கண்ணன்

1972-ஆம் ஆண்டு, உடையார்பாளையம் வட்டச் செயலாளராக இருந்தார் எனது தந்தை க.சொ.கணேசன். அவரது திருமணம் அப்போதைய முதலமைச்சரும், கழகத் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், ஜெயங்கொண்டம் பிரீமியர் கலா பேலஸ் திரையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராகு காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, சுயமரியாதைத் திருமணத்திற்கு, தலைவர் தாமதமாக வருவார் என்று சிலர் கூறியுள்ளனர். இதனால், என் தந்தை கோபித்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டார். ஆனால், குறித்த நேரத்தில் வருகை தந்த தலைவர் அவர்கள், அன்பில் தர்மலிங்கம் அவர்களை விட்டு, காரில் அழைத்து வரச் சொல்லி திருமணத்தை நடத்தி வைத்துள்ளார். பின்னர், உரையாற்றும்போது “சுயமரியாதைத் திருமணத்தில் தலைவருக்காக மணமக்கள் காத்திருப்பது தான் வழக்கம், ஆனால், இந்தத் திருமணத்தில் மணமக்களுக்காக தலைவர் காத்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது” என்று நகைச்சுவையாகப் பேசி இருக்கிறார்.

**- க.சொ.க.கண்ணன், சட்டமன்ற உறுப்பினர், ஜெயங்கொண்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நிலமற்றவர்களுக்கு நிலம்!

1967-ஆம் ஆண்டு முதல் 1975-ஆம் ஆண்டு வரை, தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது 7 லட்சத்து 19 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை 3 லட்சத்து 69 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், குடும்பங்களுக்கு அளித்தார் கலைஞர். ஐந்தாவது முறையாக 2006-ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, ஒரு லட்சத்து ஆயிரத்து 623 ஏக்கர் நிலத்தை, 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கினார் கலைஞர்.

## சீரணி → இளைஞர் அணி

31

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

# போர்முனைக்கும் தயார்!

ஓவியம் : ரவி பேலட்



*1971-ஆம் ஆண்டு, இந்திய வரலாற்றில் மட்டுமல்லாது, உலக வரலாற்றிலும் மிக முக்கியமான ஆண்டு. அந்த ஆண்டில்தான் மூன்றாவது இந்தியா-பாகிஸ்தான் யுத்தம் நடைபெற்றது. பாகிஸ்தானில் உருவான கிளர்ச்சியின்போது இந்தப் போர் நடைபெற்றது. அதன் விளைவாக வங்கதேசம் பிறந்தது.*

*பாகிஸ்தானில் வங்க மொழி பேசும் மக்கள் மிகுந்திருந்த கிழக்குப் பகுதி, ‘கிழக்கு பாகிஸ்தான்’ என்று அறியப்பட்டது. அங்கு மொழி, அரசியல், பொருளாதார ரீதியாக மக்கள் ஒடுக்கப்பட்டனர். அதனை எதிர்த்து, முஜிபுர் ரஹ்மான் தலைமையில் உள்நாட்டுக் கிளர்ச்சி வெடித்தது. அந்தக் கிளர்ச்சி 1971-ஆம் ஆண்டு மார்ச் 26 முதல் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 16 வரையிலான உள்நாட்டுப் போராக உருமாறியது.*

*அப்போது இந்தியா மீது பாகிஸ்தான் வலிந்து விமானத் தாக்குதல் நடத்தியது. அதற்குப் பதிலடி கொடுக்க, கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக இந்தியாவும் போரில் குதித்தது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இந்தப் போர் 13 நாட்களிலேயே முடிவுக்கு வந்தது. இந்தியாவின் ஆதரவால், கிழக்கு பாகிஸ்தான் தனிநாடாகப் பிரிந்து வங்கதேசமாக மாறியது.*

*அந்த யுத்தத்தின் போது, பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு நமது கழகம் ஆதரவளித்தது. வங்கதேச விடுதலைக்கு ஆதரவு தரும் விதமாக கழகத்தின் சார்பிலும், கழக அரசு சார்பிலும் நிதி திரட்டுதல், கூட்டங்கள் நடத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. அந்தச் சமயத்தில் நாட்டின் பாதுகாப்பு முயற்சிக்கு ஆதரவாக, சென்னையில் சீரணியினர் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். அதுதொடர்பாக 1971-ஆம் ஆண்டு டிசம்பர் 12 -ஆம் தேதியிட்ட ‘நம்நாடு’ இதழில் செய்தி வெளியாகியுள்ளது.*

*ஆயிரம் சீரணித் தொண்டர்கள் கலந்து கொண்ட அந்த ஊர்வலத்துக்கு சீரணியை நிர்வகித்து வந்த தொழிலாளர் துறை அமைச்சர் என்.வி.நடராசன் தலைமை தாங்கினார். வால்டாக்ஸ் சாலை மாநகராட்சிப் பள்ளித் திடலில் தொடங்கிய அந்த ஊர்வலம் அண்ணா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கில் நிறைவுற்றது. அங்கு சீரணியினர் மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி உறுதிமொழி ஏற்றனர்.*

*முதலாவதாக, ’நாட்டில் அவசர கால நிலையையொட்டி தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் நாட்டின் பாதுகாப்புக்காக எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட சீரணி, தனது முழு ஒத்துழைப்பையும் நல்க என்றென்றும் கடமைப்பட்டுள்ளது’ என்று தீர்மானம் நிறைவேற்றி உறுதி கூறினர்.*

*இரண்டாவதாக, ’நம்முடைய நாட்டின் மீது வலுக்கட்டாயமாக போர் தொடுத்த பாகிஸ்தானை குறுகிய காலத்தில் முறியடித்து, மகத்தான வெற்றியை ஈட்டித் தந்த நம் முப்படையினருக்கும் சீரணி வணக்கம் செலுத்தி, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது’ என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*மூன்றாவதாக, ‘இப்போரில் நாட்டின் மானத்தைக் காக்க உயிர் இழந்த வீரர்களுக்கும், அவ்வீரர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கும் சீரணி தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது’ என்றும் தீர்மானம் நிறைவேற்றியது.*

*பிறகு அமைச்சர் நடராசன் பேசும்போது, “சீரணித் தொண்டர்கள் 600 பேருக்கு மேல் தாங்கள் போர்முனைக்குச் செல்லத் தயார் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 250 பேர் ரத்த தானம் அளிக்கப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். சிவில் பாதுகாப்பையொட்டிய பொதுத் தொண்டில் ஈடுபட 750 சீரணித் தொண்டர்கள் தங்கள் பெயர்களை அளித்திருக்கின்றனர்” என்று தெரிவித்தார்.*

*இவ்வாறு, பொதுத் தொண்டுக்கு மட்டுமல்லாது, போர்முனைக்கும் செல்ல தயாராக இருந்தது சீரணி.*

**...வெற்றிநடை போடும்.**

> **“சீரணித் தொண்டர்கள் 600 பேருக்கு மேல் தாங்கள் போர்முனைக்குச் செல்லத் தயார் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 250 பேர் ரத்த தானம் அளிக்கப் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.**

## பொய்ப்பெட்டி

31

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”

# பொதுமக்களின் பாராட்டும் பொய்யர்களின் எரிச்சலும்...




***துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதற்கு ‘வாரிசு அரசியல்’, ‘குடும்ப அரசியல்’ என்று அ.தி.மு.க.-பா.ஜ.க. கதறுவது ஏன்?***

*கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், ஆணிவேராகத் திகழும் தொண்டர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், பொது நல இயக்கத்தினர், திரைக் கலைஞர்கள் உள்ளிட்ட பலருடைய வாழ்த்துகளுடன் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறார் தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.*

*சட்டப்படியான இந்தப் பொறுப்பேற்பைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கதறுவதுடன், சமூக வலைதளங்களில் எதிர்மறை கருத்துகளைப் பதிவிட்டு தங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டினார்கள். அவர்களுக்கு ஏன் வயிறு எரிய வேண்டும்?*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரன், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மகன் என்பதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள். அதை அறிந்தே சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் அவருக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து சட்டமன்ற உறுப்பினராக்கினார்கள். தொகுதி மக்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டு நிறைவேற்றி பெயர் பெற்றார். அவருக்கு இளைஞர் நலன்-விளையாட்டுத் துறை அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டது. அதிலும் அவர் தன் திறமையை வெளிப்படுத்தி, விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி வருகிறார்.*

*சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் மூலம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட முக்கியமான திட்டங்களைக் குறையின்றி நிறைவேற்றித் தருகிறார். கழகத்திலும் இளைஞர் அணியைக் கொள்கை வலிவுமிக்க அணியாக பயிற்சிப் பாசறைகளை நடத்தியும், மாநில உரிமை மாநாடாக இரண்டாவது மாநில மாநாட்டை நடத்தியும், இளைஞர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகத் திகழ்கிறார். கழகத்திற்கான எதிர்காலத் தலைமுறைப் பேச்சாளர்களை உருவாக்கும் வகையில், மாணவமணிகளிடம் திராவிடத்தை விதைத்து வருகிறார். கழகத் தலைமையால் ஒருங்கிணைப்புக் குழுவில் நிர்ணயிக்கப்பட்டு, கட்சியின் கட்டமைப்பையும் பலப்படுத்தி வருகிறார். அவருடைய திறமை மீது எத்தகைய குற்றச்சாட்டையும் சொல்ல முடியாமல் வயிறெரிபவர்கள்தான் ‘வாரிசு அரசியல்’ என்ற பழைய ஒப்பாரிப் பல்லவியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கொள்கை உறுதிமிக்க ஒரு தலைவர் உருவாகி வருகிறார் என்று கழகத்தினரும், மக்கள் நலன் மீது அக்கறை கொண்ட ஒரு துணை முதலமைச்சர் கிடைத்திருக்கிறார் என்று பொதுமக்களும் பாராட்டும்போது எதிரிகளுக்கு வயிறெரியத்தானே செய்யும்!*


**...வினா தொடரும்.**

> **மக்கள் நலன் மீது அக்கறை கொண்ட ஒரு துணை முதலமைச்சர் கிடைத்திருக்கிறார் என்று பொதுமக்கள் பாராட்டும்போது எதிரிகளுக்கு வயிறெரியத்தானே செய்யும்!**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

619

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.